தர்ம
வீரன்
P.U. சின்னப்பா
K.K. பெருமாள்
M.A. ராஜாமணி
JOINT PRODUCTION OF
KUMAR, SHIVAJI &
MODERN THEATRES LTD
SALEM
C.S.D. சிங்
கதை, ஸினேரியோ, டைரக்ஷன் - B. சம்பத்குமார்.

நடிகர்கள் :

P. U சின்னப்பா	....	ஜெயகேது
C. S. D சிங்	....	தூமகேது
K. K. பெருமாள்	....	வீரசிம்மன்
P. A. குமார்	....	ரணகேது
வைக்கம் மணி	....	ராஜகுரு

காமெடியன்கள் :

A. M. குஞ்சிதபாதம் பிள்ளை		சின்னத் தம்பி
M. A. வேணு	....	பெரிய தம்பி
V. M. ஏழுமலை	....	வீரன்

நடிகைகள் :

M. A. ராஜாமணி	....	சித்ரலேகா
S. ஹைமாவதி	....	அமராவதி
P. A. பெரியநாயகி	....	ராஜீவி
C. K. செல்வாம்பாள்	....	ராஜேஸ்வரி
S. சரஸ்வதி	....	பாவாடை

இன்னும் நூற்றுக்கணக்கானவர்கள்

J. Rukmangathan.
J. Rukmangadhan

"DHARMA VEERAN"

SYNOPSIS

Conflict! Conflict! Since the early dawn of history, to the modern age of *blitzkrieg*, it has always been conflict of desires that has made or marred men and nations.

It was the conflict between Dhumakethu, chieftain of a hill tribe, and Rajendra Varma, ruler of Dakshinagiri, that started the epic feud which led to such a dramatic and tragic finale.

Dhumakethu sends an envoy to King Rajendra Varma, praying for a seat for himself in the king's durbar, so that he might look after the interests of his tribesmen. The haughty king dismisses the envoy, heaping scorn on the hill-folk and their chief.

Dhumakethu, incensed, retorts by harassing the subjects of Dakshinagiri. His tribesmen are set to highway robbery. The victims go in a body to the king and pray for redress. Among them is a disguised tribesman, Ranakethu. He aims an arrow at the king and speeds away. The mortally wounded monarch reads a letter attached to the missile, asking for a final reply to the chieftain's demand. The enraged king offers his kingdom as well as his only daughter to the man who would slay Dhumakethu. Veerasimha, the commander-in-chief, vows to do it, while others are afraid.

Veerasimha encounters Dhumakethu and inflicts grievous injuries on him. Though lamed in the fight, the nimble chieftain escapes, screening himself in the midst of a flock of sheep. The triumphant Veerasimha returns to the dying king and obtains the promised reward—the kingdom, with the princess Rajeswari for queen.

The crippled Dhumakethu continues to rule over his tribesmen, aided by lovely Amaravathi, a girl he has brought up. She discloses her love for him in sly ways, but he is ever evasive. Learning that Veerasimha—now king—has a son born to him, the chieftain plots to kidnap the infant. But the valiant king foils an attempted entry into the palace and routes the kidnappers. Dhumakethu, baulked, bides his time for five years.

Veerasimha sets out, with his queen and son, on a pleasure trip on the sea. The Rajguru warns him that the heir-apparent, Rajasimha, will be short-lived and that the father himself will turn out to be the death of his own. The king pays no heed to this grim forecast, and sets out on his trip. The fates are against him. He loses both wife and son at sea and returns to the palace heart-broken.

Two of Dhumakethu's men pick up the crown prince cast ashore by the waves and hand him over to the care of Amaravathi. Dhumakethu thinks of killing the boy but the girl prevents him and promises to bring up the child. Speculating on using the boy as an instrument of terrible vengeance, the chieftain assents.

That night Amaravathi lays bare her heart and implores Dhumakethu to consummate her love. He tells her that he'd take her for mate only that day when he should win the crown of Dakshinagiri for himself. The broken-hearted belle returns to her room, only to be slain there by the chieftain's lieutenent whose lustful advances she resists.

Twelve years pass by, during which, the bereaved Veerasimha has been seeking to forget his grief by a campaign of conquest over other kingdoms. These years, his son Rajasimha has grown, in the care of the tribesmen, into sturdy youth under the name of Jayakethu.

Not knowing his royal origin, Jayakethu takes to the ways of the hill tribes, and becomes a formidable robber. He is a terror to the land. The premier of the land feels helpless.

The all-conquering king Veerasimha returns to his capital and summons all his vassals to a triumphal celebration. Among these vassals is Chitralekha, the princess of Bhuvanagiri. Her heart thirsting to avenge her father's death at the hands of Veerasimha, the princess sets out to the capital. She is waylaid and carried away by Dhumakethu's men. There she is about to be subjected to indignities when Jayakethu comes to her rescue, kills her persecutor and promises her help in wreaking vengeance on Veerasimha.

King Veerasimha surrounds the tribesmen's territory with his forces. Instigated by Dhumakethu and Chitralekha, Jayakethu challenges the king to single combat. The king accepts.

Son against father, each unaware of the other's identity—two great warriors, with the same blood coursing in their veins, ranged against each other............what terrible game of irony was grim Fate enacting here ?

The very elements seemed to stand still at the ghastly horror of son and father steeled for mortal combat. A great hush settled over all as blade crossed blade, seeking warm life-blood from the combatants.

How did this terrific duel of a Devil's making resolve itself ? See the greatest of screen climaxes unfold itself through sequences of stark power in *Dharmaveeran*.

தர்ம வீரன்

கதைச் சுருக்கம்

தக்ஷிணகிரியை இராஜேந்திர வர்மன் என்னும் அரசன் ஆட்சி புரியும் சமயம் அந் நாட்டை அடுத்துள்ள சந்தனக் காட்டில் மலைக் குறவர்கள் வாசஞ் செய்து வருகின்றனர். அவர்களின் தலைவனான தூமகேது தன் மக்களுக்கு வேண்டிய சௌகரியஞ் செய்ய அரச சபையில் தனக்கொரு ஸ்தானம் அளிக்கும்படி அடிக்கடி தூதனுப்புகிறான். ஆனால் ஆணவங்கொண்ட அரசன் அவனையும் அவன் குடிகளையும் தூஷித்து அனுப்புகிறான்.

தூமகேது, தன் எண்ணம் நிறைவேற தக்ஷிணகிரி மக்களுக்கு மறைமுகமாய் பலவித துன்பங்களை விளைவிக்கிறான்—பகற் கொள்ளையடிக்கிறான். சந்தனக் காட்டை அடுத்துள்ள கிராமவாசிகள் அரசனிடம் தூது சென்று தூமகேது செய்யும் துன்பங்களை முறையிடுகிறார்கள். அதே சமயம் அக் குடி மக்களுடன் வந்த தூமகேதுவின் ஆளான ரணகேது அரசன்மீது அம்பெய்து மறைகிறான். அதனால் அரசன் மரண காயமடைகிறான். அந்த அம்பில் தொடுக்கப்பட்ட கடிதமொன்றில் தூமகேது அரசனின் கடைசி பதிலுக்காகக் காத்திருப்பதாய் எழுதியிருக்கிறது.

கோபாவேசங் கொண்ட அரசன் தூமகேதுவை துண்டித்து வருபவர்களுக்குத் தன் நாட்டையும், தனது ஒரே மகளான இராஜேஸ்வரியையும் பரிசளிப்பதாய்க் கூறுகிறான். ஆனால் தந்திரத்தால் தப்பித்துக்கொள்ளும் தூமகேதுவிடம் துணிந்து செல்ல ஒருவரும் முன்வரவில்லை. அம்பெய்தவர்களைத் தொடர்ந்து சென்ற சேனதிபதி வீரசிம்மன் அங்கு வந்து தான் தாய்நாட்டின் க்ஷேமத்திற்காகச் செல்வதாய்க் கூறி சிப்பாய்களோடு புறப்படுகிறான்.

தூமகேதுவிடம் இருந்துவரும் இரு விகடர்கள் மேய்ந்துகொண்டிருக்கும் ஆட்டு மந்தையை ஓட்டிச் செல்ல

குடிமக்கள் பின் தொடருகிறார்கள். ரணகேதுவின் வருகைக்காகக் காத்திருந்த தூமகேது திடீரென்று வீரசிம்மனால் தாக்கப்பட்டு கால் முறிந்து அங்கு ஓட்டி வரப்பட்ட ஆட்டு மந்தையுடன் மறைந்துவிடுகிறான்.

ஜெய கோஷத்துடன் வீரசிம்மன் அரண்மனை சென்று அங்கு மரணாவஸ்தையில் இருக்கும் அரசனிடமிருந்து நாட்டையும் நங்கையையும் அடைகிறான். இருவருக்கும்—வீரசிம்மனுக்கும் இராஜேஸ்வரிக்கும்—திருமணம் நடந்து சல்லாபமாய் இருக்கிறார்கள்.

கால் முறிபட்ட தூமகேது, தன்னால் வளர்க்கப்பட்டு வரும் அழகி அமராவதியின் உதவியால் மலைக் குறவர்களை ஆட்சி செய்து வருகிறான். அவள் தன் காதலை மறைமுகமாய்த் தெரிவிக்க தூமகேது அதற்குச் சரியான பதில் கொடுக்காது இருந்து விடுகிறான். விகடர்கள் உதவி கொண்டு ஓர் செட்டி வீட்டை கள்ளர்கள் கொள்ளையடிக்கின்றனர்.

ஒருவன் வந்து அரசனுக்கு—வீரசிம்மனுக்கு—ஆண் குழந்தை பிறந்திருப்பதாய் அறிவிக்கிறான். தூமகேதுவும் ரணகேதுவும் குழந்தையைத் தூக்கிவர ஆலோசிக்கின்றனர்.

நள்ளிரவில் ரணகேது தன் ஆட்களுடன் அந்தப்புரத்தில் புகுந்து வீரசிம்மனால் அடித்துத் துரத்தப்படுகிறான். தன் முயற்சி வீணானதைக் கேள்விப்பட்ட தூமகேது அக்குழந்தையைக் கொண்டுவரும் முயற்சியிலேயே ஐந்து வருஷத்தைப் போக்குகிறான். ஒருநாள், அரசன் குழந்தையுடன் சமுத்திரத்தில் உல்லாச பிரயாணம் செல்வதாய்க் கேள்விப்பட்டு தூமகேது தன் ஆட்களை அனுப்புகிறான்.

அந்தப்புரத்திலிருந்து உல்லாசப் பிரயாணத்துக்குப் புறப்படும் சமயம் இராஜகுரு அங்கு வந்து குழந்தை இராஜசிம்மன் அற்பாயுசு உள்ளவன் என்றும், குழந்தையின் உயிருக்கு எமன் தந்தைதானென்றும் அறிவிக்கிறார். அதைப் பொருட்படுத்தாது அரசன் தன் மனைவி மகனுடன் பிரயாணஞ் செய்யும்போது விதிவசத்தால் சமுத்திரத்தில் மனைவியையும் மகனையுமிழந்து அரண்மனை திரும்புகிறான்.

தூமகேதுவிடம் கள்ளர்கள் இச் செய்தியை முறையிடு கிறார்கள். ஆனால் சமுத்திரக்கரையில் ஒதுக்கப்பட்ட இராஜ சிம்மனைத் தூக்கிவந்த விகடர்கள் பையனை அமராவதியிடம் ஒப்படைத்து தூமகேதுவுக்கு செய்தி அறிவிக்கிறார்கள். தூமகேது அமராவதியிடம் சென்று குழந்தையைக் கொல்ல முயற்சிக்க அவள் தடுத்துத் தான் வளர்த்து வருவதாய்க் கூறுகிறாள். பழிவாங்க நினைத்த தூமகேது அதற்கு இசைகிறான்.

அன்றிரவு தன் எண்ணத்தை பூர்த்தி செய்யும்படி அமராவதி தூமகேதுவை வேண்டுகிறாள். ஆனால் தூமகேது தான் என்று தக்ஷிணகிரி சிம்மாசனத்தை அடைகிறானோ அன்றே அவளைக் காதலியாய் ஏற்றுக் கொள்வதாய்க் கூறு கிறான். இதனால் வெறுப்படைந்த அமராவதி தன் அறைக்கு வர அங்கு ரணகேதுவால் பலாத்கரிக்கப்பட்டு கொல்லப் படுகிறாள்.

தன் மனைவி மகன் பிரிவாற்றாமை தாங்காத வீரசிம்மன் திக் விஜயஞ் செய்யப் புறப்படுகிறான். ஒவ்வொரு நாட்டை யும் ஜெயித்து பன்னிரண்டு வருஷங்கள் மறைகிறது.

தூமகேதுவால் வளர்க்கப்பட்ட இராஜசிம்மன், ஜெய கேது என்ற பெயருடன் நேரிய முறையில் நாட்டுக்குள் புகுந்து கொள்ளையடித்து வருகிறான். மந்திரி இச் செய்தி கேட்டு செய்வதின்னதென்று தெரியாது திகைக்கிறார். அரசனிடமிருந்தும் செய்தி கிடைக்கவில்லை. ஆனால் அவனால் ஜெயிக்கப்பட்ட நாடுகளிலிருந்து கப்பம் தவறாது வந்து கொண்டிருக்கிறது. அதில் புவனகிரி இளவரசி ஒருவள்.

வீரசிம்மன் நாட்டையடைந்து ஏகாதிபத்ய தினக் கொண்டாட்டத்திற்கு தனது சிற்றரசர்களை வரவழைக் கிறான். புவனகிரி இளவரசியும் தன் தந்தையைக் கொன்ற தற்காக வீரசிம்மனைப் பழிவாங்க கப்பத்துடன் வந்துகொண் டிருக்கிறாள். அவளை ரணகேது தன் கூட்டத்தோடு வழி மறித்துத் தூக்கிக்கொண்டு போய்விடுகிறான். தப்பித்து

வந்த ஒருவன் வீரசிம்மன் தர்பாரில் கூற, வீரசிம்மன் கோபம் கொண்டு மறு நாளையே சந்தனக்காட்டை அழித்துவிட உறுதி கொண்டு சபையைக் கலைக்கிறான்.

சிறை செய்யப்பட்ட புவனகிரி இளவரசி சித்ரலேகா தூமகேதுமுன் கொண்டுவரப்பட்டு ரணகேதுவால் மான பங்கம் செய்யப்படும் சமயம், அங்கு வந்த ஜெயகேது அதைத் தடுக்கிறான். ரணகேதுவுக்கும் ஜெயகேதுவுக்கும் சண்டை ஏற்பட்டு ரணகேது மடிகிறான். சித்ரலேகா விடுதலையடைந்து வீரசிம்மனைப் பழிவாங்கும் முயற்சியில் ஒத்தாசைபுரிய ஜெய கேதுவை துணைகொள்கிறாள்.

வீரசிம்மன் தன் படைகளோடு வந்து சந்தனக்காட்டை சூழ்ந்துகொள்கிறான். இதைக் கேள்விப்பட்ட தூமகேது ஜெயகேதுவை சண்டைக்கு அனுப்புகிறான். ஜெயகேது வீரசிம்மனை தனிப்போருக்கழைக்க இருவரும் சண்டையிடுகிறார்கள். சூரியாஸ்தமன சமயம் வீரசிம்மன் தோல்வியடைய அவனைக் கொல்லாது மறுநாள் வரும்படி ஜெயகேது அனுப்புகிறான்.

இரவில் வீரசிம்மன் தன் மந்திரியுடன் ஜெயகேதுவைப் பற்றிச் சிந்திக்கிறான். அதேசமயம் தூமகேதுவும் சித்ர லேகாவும் ஜெயகேது அன்று போர்க்களத்தில் வீர சிம்ம னுக்கு விட்டுக்கொடுத்ததற்காகக் கோபித்துக் கொள் கிறார்கள்.

மறுநாட் காலையில் மறுபடியும் சண்டை துவங்குகிறது. அவமானத்தால் ஆத்திரமடைந்த வீரசிம்மனும் உணர்ச்சியால் உந்தப்பட்ட ஜயகேதுவும் வெகு உக்கிரமாக சண்டை செய்கின்றனர். இக் கோரக்காக்ஷியைக் கண்ட சராசரங்கள் ஸ்தம்பிக்கின்றன. எங்கும் நிசப்தம். இதன் முடிவு என்ன ?

தர்ம வீரன்

பாட்டுகள்

1. குடியானவர்கள் :

சிங்காரக் கும்மி—ஏகதாளம்

தக்ஷணகிரிக்கு நேரு வடக்காலே
சந்தனக் காட்டுக்குள்ளே தன்னானே
சந்தனக் காட்டுக்குள்ளே
தப்பித் தவறியே போன மனுஷாளு
தலையைக் கண்டதில்லை தன்னானே
தலையைக் கண்டதில்லை
காட்டு ராசாவின்னு பாலு குடிக்கிற
கைப் பிள்ளையும் நடுங்கும் தன்னானே
கைப் பிள்ளையும் நடுங்கும்
நாட்டுப்புறத்திலும் திவட்டிக் கொள்ளையால்
நடு நடுங்குதடி தன்னானே
நடு நடுங்குதடி
பட்டப் பகலிலே பக வேஷத்தோட
பட்டணக் கொள்ளையடி தன்னானே
பட்டணக் கொள்ளையடி
நட்டுமுட்டு சாமான் லொட்டு லொசுக்கெல்லாம்
நமக்கு யில்லையடி தன்னானே
நமக்கு யில்லையடி
நாத்துக்கொல்லையிலே குண்டுமணி சம்பா
நடவு நட்டாலும் தன்னானே
நடவு நட்டாலும்
சோத்துக்கு ராத்திரி ஊட்டுக்கு போனதும்
தொந்தரவு படணும் தன்னானே
தொந்தரவு படணும்.

2. ராஜேஸ்வரியும், தோழிகளும் :

இராகம்—பாஹேஸ்வரி—தாளம் ஆதி

இயற்கையின் மலர் மணம் வீசும்—மதி
ஹிருதயம் கவர் பிரகாசம்—பசும்
மயிலினம் ஆட வுல்லாசம்—குயில்
மகிழ்ந்திடக் கூவுமிவ்வாசம். (இ)

திருமகள் வாழும் நல்வனமே—திவ்ய
சுதியுடன் பாடும் வண்டினமே—பல
பறவைகள் இசை மொழிக்கணமே—கேட்டுப்
பரவச மாகுதென் மனமே. (இ)

---

3. அமராவதி :

கொளகிட சேர்ஸவ தேரா—என்ற மெட்டு

பல்லவி

சரச சல்லாப வொய்யாரா
சகியேனினி கூடிட வாராய். (சர)

சரணம்

பூரண மதியால் சோருதென் மனமே
மாரன் கணை தனிலே—இப்போதே
மாரன் கணை தனிலே

வாடுகின்றேனே மோடி செய்வானேன்
கூடும் நேரமிதே—இப்போதே
கூடும் நேரமிதே. (சர)

4. கள்ளக் கூட்டத்தார் :

ஹிந்துஸ்தான்—(கபரய்)

கஜல்

பய மென்பதே யறி யோமே
சுய அரசாட்சியே
ஜெய மோங்க சிங்கம் போல
செல்லு வோமே.

பாட்டு

ராஜாதி ராஜனுகை யிருந்திட்டாலும்
நாங்களஞ் சோமே—எப்போதும்
நாங்களஞ் சோமே
சூராதி சூரனையினுமே இப்போதே
துடிக்கவதைப் போமே—நெஞ்சந்
துடிக்கவதைப் போமே. (ரா)

என்றைுமெங்க யெசமான் சொல்லை மீறி
யேதும் செய்யோமே—நாங்கள்
யேதும் செய்யோமே
இன்னளில் யெங்கள் வாழ்வினிலே துயரம்
என்பதறி யோமே—நாங்கள்
என்று மறியோமே. (ரா)

5. தோழி :

இராகம்—நீலாம்புரி—தாளம் ஜம்பை

பல்லவி

சிங்கார மாமணி யே—சீராளா. (சி)

அனுபல்லவி

செங்கோலும் முடிபுனையச்
சீரும் சிறப்புடனே
மங்காத திருவதன
மைந்தா நீ கண்வளராய். (சி)

சரணம்

பொன்னே மரகதமே பூஷணமே
முன்னாளின் தவப்பயனே
முருவலொளி கண்மணியே
இன்னாளில் கலி தீர்த்த
இளமதியே கண்வளராய். (சி)

---

6. ராஜ குரு :

இராகம்—அடாணா—ஆதிதாளம்

பல்லவி

நீ மனஞ் சோர்ந்திடில் தகலேது—அப்பா
நிகில உலகாளும் வீரம் நிறைந்திட்ட (நீ)

அநுபல்லவி

மாமகள் பாலனில்லாதெதும் ஆகுமோ
மௌனகுரு வெவாக்கும தாயல்லவோ—அப்பா (நீ)

சரணம்

மானில வாழ்வு பொய் மின்மினியே
நம்மாதுடன் மக்களும் அம்மின் னொளியே
ஏன் விதியுமவனும் இரண்டல்ல ஒன்று நீ
ஈதறிவாய் உயர் வாழ்வடைவாய். (நீ)

7. தோழி :

சுத்தசாவேரி—திஸ்ரம்

பல்லவி

மனமகிழ் ஆனந்தமே நற்சுகமே
மாரன் புகழ்ந்திடும்
ஆழி உல்லாசமே. (ம)

அநுபல்லவி

இணைபிறியாத காதலர் போல
தினகரன் ஒளியதை ஜலமதில் காண (ம)

சரணம்

வாத்தியக் கோஷம் முழங்கினற் போலே
வருகுதே அலையின் ஓசை முன்னாலே
நேர்த்தியைக் காண அருள் இறையாலே
நிறைந்திடும் காட்சிகள் இதை நினைந்தாலே. (ம)

---

8. ஜெயகேது :

இராகம்—நவரச கன்னடா—தாளம் ரூபகம்.

பல்லவி

திரிபுர சுந்தரி ஸ்ரீ
ஜெகம்புகழ் நிரந்தரி. (தி)

அனுபல்லவி

மரகதமா உமா பைரவி நீ
மனோகரி ஸ்ரீ கௌரி. (தி)

சரணம்

தழலொளி விழி கோர வதனி
சர்வாங்கினி அம்பா
சாமுண்டீஸ்வரி
தருணி சிவன் பாரி நிமலி நீ
திரிசூலி நீ பவானி. (தி)

9. சித்ரலேகா :

ஷோலட்—மிஸ்ரம்

பல்லவி

பரவசமானேன் இறையருளாலே
விடுதலையடைந்தேனே.
மணங்கமழ் சோலை புனலுறும் பொய்கை
காண மனோஹரமே. (ப)

மாந்தளிர் கோதும் மாங்குயில் வாசம்
பூந்தளிர் மேலே வண்டிசை கானம்
காண மனோஹரமே. (ப)

---

10. ஜெயகேது

இந்துஸ்தான் சுருட்டி—மிஸ்ரம்

சந்தனச் சோலையிலே குயிலே
வந்து நீ கூவையிலே.

தென்றலும் வீச சிறந்தவுல்லாச
சுந்தர வோடையிலே மயிலே
வந்து நீராடையிலே.

காணமனோகரம் தானறியாத
காதலின் ஜோதியிதே மயிலே
தூது சொல்லிப்பொழுதே.

ஆம்பலும் தாமரையும் அடர்ந்த நீரோடையிலே
அன்னம் விளையாடுதே காதல்
கண்ணைக் கவர்ந்திடுதே.

11. வீரன்—பாவாடை :

கதம்பம்

பாவா : வெகு காலமா வெகு காலமா
உனைச் சேர
ஆசை வீரா நெனைச்சிருந்தேனே.

வீரன் : ஐயோ ! பாவாடை யிப்படி
சொல்லாதே தலைதப்பாது.

பாவா : நீ பயப்பட வேண்டாம் என்னாலே
ஒண்ணும் வாராது.

வீர : ஊஹூம் முடியாது.

பாவா : வெகு காலமா வெகுகாலமா
உனைச் சேர
ஆசை வீரா நெனைச் சிருந்தேனே.

வீர : ஒண்ணடி ஆத்தா
போனவன் வந்தா
வீணாக யென்னை
காணா பொணமாக்குவான்.

பாவா : ஆசைக் கண்ணாளனே அப்படி
சொல்லாதே நீ.

வீர : ஆனா மம்முதன் ரதியாட்டம்
கொஞ்சி குலாவிடலாம் வா.

இருவரும்: இனி யாருமே இனியாருமே
இணையேது
நமக் காரும் எதிர் கிடையாது

12. ஜெயகேது—சித்ரலேகா :

ஹிந்தி (வ. மெட்டு)—ஏகதாளம்

சித் : விரும்பேன் விரும்பேன்
தனி மதுரித மொழியதில்
மயக்கிடும் புருஷரை (வி)

ஆருயிரென்னும் ஆடவர் குணமே
கணமதில் மறைந்திடும் மனமதிலுணர்ந்தே (வி)

ஜெய : வீரம் நிறைந்த ஆடவர் மனமே
மாறிடாதறிவாய்
பாரதராணி மாசிலாவன்பே
பாக்ய வுல்லாச ஜீவியம் நீயே

சித் : சுகம் பெறுவேன்

ஜெய : உனை மறவேன்

சித் : மதன சிங்காரா மோஹன ரூபா

ஜெய : வதன சிங்காரி மோஹன யுவதி

சித் : குறைவிலா திறையருள் நிறைந்திடும் மனமே

ஜெய : ஒரு மனதெனவினி பெருகிடும் சுகமே

இருவரும் : இனிதே இனிதே
இணை பிறிவிலா சகமதில்
இனியொன்றும் விரும்பிடோம். (இ)

---

13. ஜெயகேது :

ராக மாலிகை—தாளம் திஸ்ரம்

ஜெயக்கொடி தருவாய் தேவி கபாலி
ஜெகதல மொடுங்கிடச் செய்திடும் நீலி
அயன் அரன் மாலும் புகழ்ந்திடும் மாலி
அடியேனைக் காத்து ஆண்டிடும் சூலி.

அடிக்கவும் அணைக்கவும் அன்னை நீதானே
ஆதாரமுன்னையன்றி துணையறியேனே
இடைவிடாதென்றும் உன்னைமறவேனே
இன்று ஜெயமணி யருள் பணிந்தேனே.

பண்டைய மன்னர்கள் உன்னருளாலே
பாரத பூமியில் வெற்றிச் செங்கோலே
என்றும் உலாவியே நிற்கு துன்னாலே
ஏனின்னம் தாமதம் பாரும் கண்ணாலே.

அன்ன முறிஞ்சும்பாலில் தண்ணீர் சேராதே
அறிந்து மென்குறைகளைந் தாளு மிப்போதே
நின்னடி துதிக்கும் சேயனின் மீதே
நீங்காத அன்புவைத்து எனைக் கைவிடாதே.

---

14. ராஜகுரு:

ஹிந்துஸ்தான் (மெட்டு)

ஜெக நாதா ஆதியனாதா
தூய ஞான விபோதா
சோதி வினோதா (ஜெ)

பூதல வாழ்வு யாவும் நில்லாதே
திதென விதியை தாழ்வு சொல்லாதே
மாதுடன் பிள்ளை மாய்கை பொல்லாதே
மனதில் நீயே
அறிந்திடுவாயே. (ஜெ)

பாட்டு K. R. குப்புசாமி, கள்ளிப்பாடி.

PRINTED AT THE SUNDAY TIMES PRESS, G. T., MADRAS

எங்கள் அடுத்த படத்தை
எதிர்பாருங்கள்!

★

மகோன்னத புராண - சமூக
சித்திரம்

●

அகில இந்திய புகழ்
பெற்ற நக்ஷத்திரங்கள்
நடிப்பது!

★

விவரங்களுக்கு

குமார் பிக்சர்ஸ்

கோயமுத்தூர்

உ

தந்தி:
"உத்தமி"

R. T.
2866

ஸ்தாபிதம்
1924

ரெங்கூன் முயல் மார்க்

அ. மு. ந.

பிரிலியண்ட் வைரங்கள்

தோடு சைஸ் .... அணா 12
பேசரி சைஸ் .... அணா 10
உருவு ரதி 1-க்கு ரூ. 2—8—0

ரெத்தின வைரங்கள்

அ. மு. மா.

தோடு சைஸ் .... அணா 8
பேசரி சைஸ் .... அணா 6
உருவு ரதி 1-க்கு ரூ. 1—8—0

கெமிக்கல் வைரங்கள்

2 அணா முதல் 6 அணா வரையில் கிடைக்கும்

முயல் மார்க் கெமிக்கல் வைரம் எல்லா ஊர் ஷறப் வியாபாரிகளிடமும் கிடைக்கும்

அ. மு. நடராஜன் செட்டி & பிரதர்ஸ்,
ரெங்கூன் முயல் மார்க் கெமிக்கல் வைர வியாபாரம்,
86, முகல் ரோட், ரெங்கூன் :: பெரிய பஜார், திருச்சி.